**செய்தி வெளியீடு எண்:745** **நாள்: 04.11.2017**

**செய்தி வெளியீடு**

**பெருநகர சென்னை மாநகராட்சி அயனாவரம் பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகள் – மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு கே.சி.கருப்பணன் ஆகியோர் நேரில் ஆய்வு – மழைநீர் பாதிப்பைத் தடுக்க நல்லாறு கால்வாய் தடுப்பை அப்புறப்படுத்த உடனடி நடவடிக்கை**

தற்போது, சென்னையில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் சென்னை மாநகராட்சிப் பகுதியில் இன்று (4.11.2017), மண்டலம்–6க்கு உட்பட்ட ஓட்டேரி பக்கிங்காம் கால்வாய், அம்பேத்கர் கல்லூரி சாலை, டிகாஸ்டர் சாலை, சின்னபாபு தெரு ஆகிய பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றுவது, அங்கு தேங்கியுள்ள மழைநீரால் ஏற்படும் பாதிப்புகள், மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து ஜி.எம்.ஆர் பகுதி, நல்லாறு பக்கிங்காம் கால்வாய், பேசின்பிரிட்ஜ் இணைப்புச் சாலை ஆகிய பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், அங்குள்ள தடுப்புகளை உடனடியாக அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட இரயில்வே நிர்வாகத்திடமும், ஜி.எம்.ஆர் நிர்வாகத்திடமும் கலந்துபேசி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது ஆவின் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.காமராஜ், இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் சென்றனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**